DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 132/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **காளிஸ்வரன்** |
| Father's Name | : | வெள்ளைச்சாமி |
| Village | : | காளையார்கோவில் |
| Taluk | : | காளையார்கோவில் |
| Calling | : | அரசு பேருந்து ஓட்டுநர் (ஓய்வு ) |
| Age | : | 61/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.03.2025

**முதல் விசாரணை:**

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக சிவகங்கை கிளையில் ஓட்டுநராக பணிபுரிந்து 31.05.2024 அன்று பணி ஓய்வு பெற்று காளையார்கோவிலில் வசித்து வருகிறேன். வழக்கில் இன்று ஆஜர் இல்லாத எதிரியை தெரியுமா என்றால் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக எதிரியை என்னால் அடையாம் காண இயலாது. சாட்சி முருகன் என்வரை தெரியும் என்னுடன் பணிபுரியும்போக்குவர்த்து கழக நடத்துனார் ஆவார். சாட்சிகள் பழனிச்சாமி , பாஸ்கரன் ஆகியோரை தெரியும். அவர்கள் இருவரும் மற்றோரு அரசு பேருந்ததின் நடத்துடன் மற்றும் ஓட்டுநர் ஆவார். கடந்த 07.10.2014 ம் தேதி தடம் எண் 16 , பேருந்து எண் TN 63 N 0871 என்ற அரசு பேருந்தின் அதே கிளையில் நான் ஓட்டுநராக இருந்து பேருந்தை எடுத்து கொண்டு வந்தேன்

என்னுடன் அதே பேருந்தில் நடத்துனாராக முருகன் என்பவர் பணியாற்றினார். நான் அந்த பேருந்தை சிவகங்கையில் இருந்து மதியம் 03.00 அளவில் எடுத்துகொண்டு கருங்குளம் சென்றுவிட்டு மீண்டும் சிவகங்கை வருவதற்காக காளையார்கோவில் நுழைவதற்காக மாரியம்மன் கோவில் அருகே வந்து கொண்டிருந்தேன். காளிஸ்வரன் கோவில் தீப்பற்றி எறிவதாக அறிந்து கூட்டமாக சிலர் வந்தார்கள். சுமார் 200 முதல் 300 பேர் கூட்டமா கவந்து என்னுடைய பேருந்தின் முன்பக்க முகப்பு கண்ணாடி மற்றும் பேருந்தின் பின்புற கண்ணாடியை அடித்து உடைத்துவிட்டார்கள். பின்பு அதே சம்பவத்தில் மற்றோரு அரசு பேருந்தும் சேதமானதாக சொன்னார்கள். அந்த பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பழனிச்சாமி மற்றும் பாஸ்கரன் ஆவார். சேதம் அடைந்த பேருந்தின் கண்ணாடி மதிப்பு ரூ. 10000/- இருக்கும். அதன் பிறகு காவல்நிலையம் சென்று வண்டியை நான் நிறுத்தினேன். இது சம்பந்தமாக காயைார்கோவில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது காட்டப்படும் புகார் மனு நான் காவல்நிலையத்தில் கொடுத்ததது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ- 1** ஆகும். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த போது பேருந்ததை அடித்து சேதப்படுத்திய நபரின் பெயரை என்னிடம் தெரிவித்தார்க்ள்., அந்த நபரின் பெயரை தற்போது பலவருடங்கள் ஆனதால் அதனை குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறு்க்குவிசாரணை**

போலிசார் நான் புகார் கொடுக்கும்போது விசாரித்தார். அதன் பிறகு விசாரிக்கவில்லை. புகார் கொடுக்கும்போது நான் சேத மதிப்பு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் எதிரியை நான் பார்த்ததும் இல்லை கேள்வி பட்டதும் இல்லை . சாட்சி 2 மற்றும் 3, 4 சாட்சிகள் எனது சக ஊழியர் என்றால் சரிதான். கோவில் கோபுரம் தீப்பிடித்தால் சுமார் 5000 பேர் கூடியிருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்குதெரியாது. எனது பேருந்தில் 22 பயணகள் பயணம்செய்தார்கள். எனது நிர்வாகத்தில் என்ன எழுதிக்கொடுக்கசொன்னார்களோ அதன் படி நான்

எழுதிக்கொடுத்தேன். நான் முதல் விசாரணையில் தேதி மாதம் வருடம் விபரத்தை கையில் எழுதிவைத்து பார்த்து சொன்னேன் என்றால் சரிதான். நான் சொல்வது போன்று எந்த வழக்கு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நிர்வாகம் மற்றும் காவல்துறையினர் வேண்டு்கோளுக்கு இணங்க பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.03.24 19:02:50 +0000

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 132/2024 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **முருகன்** |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | காமராஜர் காலனி |
| Taluk | : | சிவகங்ை க |
| Calling | : | அரசு பேருந்து நடத்துனர் |
| Age | : | 51/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.03.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சிவகங்கை அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனாராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தெரியும். என து பேருந்தின் ஓட்டுநராக சம்பவ காலத்தில் பணிபுரிந்து வந்தார். கடந்த 07.10.2014 ம் தேதி தேதி தடம் எண் 16 , பேருந்து எண் TN 63 N 0871 என்ற அரசு பேருந்தின் அ.சா.1 ஒட்டுநராகவும் நான் நடத்துனராகவும் இருந்து பேருந்தை ஓட்டிக்கொண்டுவந்தோம். மதியம் 04.40 மணியளவில் காளையார் கோவில் மாரியாத்த கோவில் அருகே வந்த போது கூட்டமாக வந்து பேருந்தின் முன்புறம் மற்றும் பின்புற கண்ணாடியை உடைத்து விட்டார்கள். கோவிலில் தீப்பிடித்தது சம்பந்தமாக கண்ணாடியை உடைத்தார்கள். எங்களுக்கு பின்னால் வந்த மற்றோருஅரசு பேருந்தின் கண்ணாடி உடைக்கபட்டதாக கேள்விபட்டேன்.

உடைந்த கண்ணாடிகளின் மதிப்பு ரூ. 160000/- இருக்கும். இது சம்பந்தமாக நானும்அ.சா.1ம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

07.01.2014 அன்று மாலை 05.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றோம். காளிஸ்வரன் புகார் கொடுதார் நான் உடனிருந்தேன். எங்கள் வாகனத்தில் எத்தனை நபர் பயணம்செய்தார் என்றால் எனக்கு ஞபாகமில்லை. காளையார்கோவில் பேருந்து நிலையத்திற்கும் காளிஸ்வரன் கோவிலுக்கும் இடையே உள்ள தொலைவு எனக்கு தெரியாது. மாரியம்மன் கோவிலுக்கும் காளிஸ்வரன் கோவிலுக்கும் இடையே உள்ள தொலைவு எனக்கு தெரியாது.பேருந்தை உடைக்க சுமார் 200 நபர் வந்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது கூட்டமாக வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் நிர்வாகமும் காவல்துறையின்ர் கேட்டுட்கொண்டதற்கும் அ.சா.1 புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமைக் குற்றவியல் நடுவர்,
சிவகங்கை.